கருநாடக அரசு

சுற்றுச்சூழல் கல்வி

ENVIRONMENTAL STUDIES

பயிற்சியுடன் கூடிய பாடப்புத்தகம்

TEXT CUM WORK BOOK

(புதுப்பக்கப்பட்டது - கீஉஙஜகுஉஈ)

தமிழ் வழி

Tamil MEDIUM

Part-2

2

இரண்டாம் வகுப்பு

SECOND STANDARD

KARNATAKA TEXT BOOK SOCIETY (R.)
6th Cross, Malleshwaram,
Bengaluru - 560 003.

NOT TO BE REPUBLISHED @KTBS

பொருட்கள்

N8A2K8

எண்	பாடத்தின் பெயர்	பக்கம்
10.	நம் அனைவரின் சொத்துக்கள்	1 - 9
11.	பயணம்	10 - 18
12.	என் குடும்பம்	19 - 25
13.	பண்டிகை வந்தது பண்டிகை	26 - 32
14.	பெரியவர்களின் உபசரிப்பு	33 - 35
15.	உதவி /ஒத்துழைப்பு	36 - 40
16.	ஆடி மகிழ்	41 - 48
17.	நமக்கு இவை தேவை	49 - 53
18.	வான் வெளியில்	54 - 62
19.	எனது ஊர் அழகான ஊர்	63 - 70

@KTBS NOT TO BE REPUBLISHED

S9P3I2

பாடம் - 10

நம் அனைவரின் சொத்துக்கள்

இவ்வலகைக் கற்றபின் நீங்கள்,

- பொதுச் சொத்துக்களை அறிவீர்கள். அவசியத் தேவைகளைப் பற்றி கேட்டு தெரிந்து கொள்வீர்கள்.

படத்தைப் பார். சுஜாதா எங்கு நின்றிருக்கிறாள் கவனி. இது ராணியின் வீடு. அவளின் பள்ளி வெகு தூரத்தில் உள்ளது. சுஜாதா தினமும் தன் தோழிகளுடன் பள்ளிக்குச் சென்று வருகிறாள்.

பள்ளிக்குச்செல்லும்போது சுஜாதா எதை எதை கடந்துச் செல்ல வேண்டும்? அவர்களுடன் போய் கண்டுபிடி. சுஜாதா அவைகளைப் பற்றி தெரிவிப்பாள்.

அம்புக்குறி போடப்பட்டுள்ள இடத்திலிருந்து தொடங்கு.

NOT TO BE REPUBLISHED @KTBS





என் வீட்டிலிருந்து பள்ளிக்குப் புறப்பட்டால் முதலில் காணப்படுவது அஞ்சல் நிலையம். இதன்மூலம் கடிதங்களை வெளி ஊரில் உள்ள நண்பர்கள், உறவினர்களுக்கு கடிதங்களை அனுப்பலாம்.

உன் ஊரிலுள்ள தபால் நிலையத்திற்கு செல், அங்கு நடைபெறும் வேலையைத் தெரிந்துகொள்.

@KTBS NOT TO BE REPUBLISHED



இதோ இது தெருவிளக்குகள். இரவு நேரங்களில் மக்கள் நடமாட வெளிச்சம் தேவையல்லவா? அதற்காக இவைகளை ஆங்காங்கே பொருத்தியிருக்கின்றனர். தெரு விளக்குகளை கல்லால் அடித்து சேதப்படுத்தக்கூடாது.



இது தெருக்குழாய் இங்கு யார் வேண்டுமானாலும் நீரைப் பிடித்துக் கொள்ளலாம். குழாயை பாழாக்கக் கூடாது தேவைக்கு ஏற்ப நீரை உபயோகிக்கவும்.



இது பேருந்து நிலையம் மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு ஊருக்கு பயணம் செய்யும் பேருந்துகள் இங்கு நிற்கும். உன் ஊரிலுள்ள பேருந்து நிலையத்திற்கு நீ சென்றிருக்கிறாயா? அங்கு தூய்மை எவ்வாறு செய்கிறார்கள் என்பதை அறிந்துகொள்.

NOT TO BE REPUBLISHED @KTBS



இது பொது கழிப்பறை எல்லோரின் உபயோகத்திற்காக ஆங்காங்கே இதுபோன்ற கழிப்பறைகளை கட்டியிருக்கின்றனர். இவை ஏன் தேவை என்பதை அறிந்து கொள். கண்ட கண்ட இடங்களில் மல ஜலம் கழிக்கக் கூடாது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

இது ஊரின் நியாய விலைக் கடை இங்கு குறைந்த விலையில் அரிசி, கோதுமை, சர்க்கரை எண்ணெய் முதலிய பொருட்கள் கிடைக்கும்.



இது ஒரு மருத்துவமனை. மக்களின் ஆரோக்கியத்தைக் காக்க மருத்துவமனைகள் உள்ளன. நீ எந்த சூழ்நிலையில் மருத்துவ மனைக்கு சென்றுள்ளாய்? சொல்.

பூங்காவின் வழியாக கடந்து சென்றால் அங்கு என் பள்ளிக்கூடம். இப்பூங்காவில் வித விதமான செடி சொடிகள், மரங்கள் உள்ளன. வண்ணத்துப் பூச்சிகளும், பறவைகளும் பறந்து கொண்டிருக்கும். விளையாட ஊஞ்சல் உள்ளது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

இது என் பள்ளிக்கூடம். இது பெரியதாக உள்ளது. எட்டு அறைகள் உள்ளன. சுற்றிலும் பூந்தோட்டங்கள் இருக்கின்றன. பள்ளியின் வலப்புறம் விளையாட்டு மைதானம் இருக்கிறது. நானும் என் நண்பர்களும் சேர்ந்து இதை சுத்தம் செய்கிறோம். என் பள்ளி என்றால் எனக்கு மிகவும் விருப்பம்.

உன் பள்ளிக்கூடத்தைப் பற்றி இரண்டு வாக்கியங்களில் கூறு.

©KTBS NOT TO BE REPUBLISHED

சுஜாதாவின் வீட்டிலிருந்து பள்ளிக்குப் போகும்போது நீ என்னென்ன பார்த்தாய்? கீழுள்ள கட்டங்களில் எழுது.

வ. எண்	பார்த்த இடங்கள்	இவை உன் ஊரில் இருந்தால் (✓) போடு	உன் ஊரில் இல்லை என்றால் (X) போடு
1.			
2.			
3.			
4.			
5.			
6.			
7.			
8.			
9.			
10.			

@KTBS NOT TO BE REPUBLISHED

மக்களுக்கு உதவிசெய்ய ஊரில் பள்ளிக்கூடம் அஞ்சல் அலுவலகம், மருத்துவமனை, நியாய விலைக்கடைகள், கழிப்பறைகள், பேருந்து நிலையம், தெருவிளக்குகள், தெருக் குழாய்கள் போன்றவை இருக்கின்றன. இவை யெல்லாம் நம்முடைய தேவைகளை நிறைவு செய்கின்றன. இவை நம் எல்லோரின் சொத்து எனவே இது பொதுச் சொத்து.

உன் ஊரிலுள்ள பொது சொத்துக்களை இந்த வட்டங்களில் எழுது. ஒவ்வொன்றின் பயன்பாட்டையும் உன்னுடைய ஆசிரியர் அல்லது பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்.



@KTBS
NOT TO BE REPUBLISHED

ஊரில் அனைவரும் பயன்படுத்தும் வசதிகளே பொது சொத்து இவ்வசதிகளின் அவசியம் நம் அனைவருக்கும் உள்ளது. பொது சொத்துகளை நாசப்படுத்தாமல் எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ள வேண்டும். பொதுக்குழாய்கள், தெருவிளக்குகளுக்கு நாசத்தை உண்டாக்கக் கூடாது. பொது கழிப்பிடங்களை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். பூங்காக்களில் குப்பைகளைக் கொட்டக்கூடாது.

ஒருவாக்கியத்தில் விடையளி.

1) அஞ்சல் அட்டையை நீ எங்கிருந்து பெறுவாய்?

____

2) உன் ஊரிலுள்ள மருத்துவ மனையால் உனக்கு என்ன நன்மை?

____

3) ஊரில் பேருந்துகள் வந்து நிற்குமிடத்தின் பெயர் என்ன?

____

4) உன் பள்ளி அழகாகத் தெரிய நீ என்ன செய்வாய்?

____

____

5) தெருக் குழாய் எதற்காக உள்ளது?

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

பொதுச் சொத்து நம் எல்லோரின் சொத்து

படம் - 11

பயணம்

இவ்வலகைக் கற்றபின் நீங்கள்,

- போக்குவரத்து சாதனங்களையும், வேகமாக மற்றும் நிதானமாக செல்லும் வாகனங்களையும் வகைப்படுத்துவீர்கள்.
- நிலம், நீர் மற்றும் வான் வழி போக்குவரத்து சாதனங்களை அறிவீர்கள்.

➢ நீ பள்ளிக்கு எப்படி வருவாய்?

➢ நீ வேறு ஊருக்கு போக வேண்டுமானால், எவ்வாறு போவாய்?

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மக்கள் மற்றும் சரக்குகளை ஏற்றிச் செல்லும் சாதனங்களே வாகனங்கள் எனப்படும்.

நீ பார்க்கும் வாகனங்களின் பெயர்களை எழுது.

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________
6. ____________________
7. ____________________
8. ____________________

@KTBS NOT TO BE REPUBLISHED

படத்திலுள்ள வாகனங்களின் பெயர்களை கட்டங்களில் எழுது.













@KTBS NOT TO BE REPUBLISHED

கீழே பெயிரிடப்பட்டுள்ள வாகனங்களில், நிதானமாக மற்றும் வேகமாக செல்லும் வாகனங்கள் என்று (✓) குறியிட்டு காட்டு.

எண்	வாகனங்களின் பெயர்	நிதானமாக செல்லும்	வேகமாக செல்லும்
1.	சைக்கிள்		
2.	மாட்டு வண்டி		
3.	பேருந்து		
4.	தொடர்வண்டி		
5.	விமானம்		
6.	லாரி		
7.	குதிரைவண்டி		
8.	மோட்டார் சைக்கிள்		
9.	ஆட்டோரிக்ஷா		
10.	படகு		

@KTBS NOT TO BE REPUBLISHED



ரகீமின் ஊர் கார்வார். அவனது தாத்தாவின் வீடு உடுப்பியில் உள்ளது. இப்பொழுது ரகீம் அவனின் தாத்தா வீட்டிற்கு புறப்பட்டிருக்கிறான். கீழுள்ள எந்த வாகனத்தில் பயணம் செய்தால் தன் தாத்தாவின் வீட்டை விரைவாக அடைவான்? அந்த வாகனத்தின் முன் (✓) குறியிடு.






ஹரினி சிவமோக்கவாவிலிருந்து துமகூரில் உள்ள தன் பாட்டியின் வீட்டிற்கு எந்த வாகனத்தில் போனால் சிறந்தது? அந்த வானகத்தின் முன் (✓) குறியிடு.




@KTBS
NOT TO BE REPUBLISHED

குல்பர்காவில் ரமேசும், ஜானும் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள். இருவரும் ஒரே அலுவலகத்தில் வேலை செய்கின்றனர். தினமும் தம் தம் வாகனங்களில் ஒரே நேரத்தில் அலுவலகத்திற்கு புறப்படுகின்றனர். இதில் யார் முதலில் அலுவலகத்தை வந்தடைவர் என்பதை குறியிட்டு (✓)காட்டு.



விடை தருக.

- நிலத்தின் மேல் செல்லும் ஏதாவது 2 வாகனங்களை எழுது.

- நீரின் மேல் செல்லும் வாகனங்களைப் பார்த்திருக்கிறாயா? அவைகளின் பெயர்களைக்கூறு? நீ அவற்றில் பயணம் செய்துள்ளாயா?

- ஆகாயத்தில் செல்லும் வாகனங்கள் பற்றி உனக்குத் தெரியுமா? ஒரு வாகனத்தின் பெயரை எழுது.

@KTBS NOT TO BE REPUBLISHED

இங்கு சில வாகனங்களின் பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவை எங்கு செல்கின்றன என்பதை கீழுள்ள பட்டியலில் எழுது.

லாரி, பேருந்து, மிதிவண்டி, படகு, விமானம், கார், மாட்டு வண்டி, கப்பல், ஹெலிகாப்டர், குதிரைவண்டி, மோட்டார் சைக்கிள், படகு.

வ எண்	நிலத்தின் மேல் செல்லும் வாகனங்களின் பெயர்	நீரில் செல்லும் வாகனங்களின் பெயர்	ஆகாயத் தில்செல்லும் வாகனங்களின் பெயர்
1.			
2.			
3.			
4.			
5.			
6.			

@KTBS NOT TO BE REPUBLISHED

- நிலத்தின் மேல் செல்லும் வாகன வசதியை நிலவழி போக்குவரத்து என்பர்.
- நீரின் மேல் செல்லும் வாகன வசதியை நீர் வழி போக்கு வரத்து என்பர்.
- காற்றில் செல்லும் வாகன வசதியை வான் வழி போக்குவரத்து என்பர்.

வண்ணம் தீட்டுக:

கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டு. இவை எந்த வாகனங்கள் என்று குறிப்பிடு.



@KTBS NOT TO BE REPUBLISHED

கீழுள்ள படங்களில் வாகனங்களையும், அவைகளின் உபயோகங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை கோடிட்டு பொருத்துக.











@KTBS
NOT TO BE REPUBLISHED





மேலுள்ள படத்தில் சில வாகனங்கள் காட்டப்பட்டுள்ளன. இதில் மக்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு ○ குறியிடு. சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு □ குறியிடு. இரண்டையும் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு △ குறியிடு.

தீப்பெட்டிகளை இணைத்து இரயில் வண்டி செய். காகிதத்தினால் விமானம் செய், வீட்டில் சென்று பறக்க விடு.

NOT TO BE REPUBLISHED @KTBS

நான்யார்? விடுவிக்க.

பறப்பேன் பறவையல்ல
பளபளப்பேன் நட்சத்திரமல்ல
சக்கரமுண்டு கார் அல்ல
வேகமுண்டு சிறுத்தையல்ல
என் பெயரைக் கூறு ☐

சாலையில் செல்லமாட்டேன்
வானத்தில் மிதக்கமாட்டேன்
மின்னலைப்போல் என் ஓட்டம்
சிக்கு புக்கு என் ஆட்டம்
என் பெயரைக் கூறு ☐

பார்ப்பீர் எல்லாம் என் ஆட்டம்
நீரின் மேல் என் ஓட்டம்
இறகு இல்லை எனக்கு
வேண்டாம் எந்த உணவும்.
என் பெயரைக் கூறு ☐

பாடம் - 12

என் குடும்பம்

H8N7Z2

இவ்வலகைக் கற்றபின் நீங்கள்

- குடும்பங்களில் இருக்கும் வகைகளை அறிவீர்கள்.
- குடும்பம் ஒரு ஆதார அமைப்பு என்பதை அறிவீர்கள்.
- நாம் மற்றவர்களைப் போல இருக்கிறோம். ஆனால் மற்றவர்களைவிட மாறுபடுகிறோம் என்பதை அறிவீர்கள்.

இப்பாடங்களைப் பார். ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை எண்ணி எழுது.

வ. எண்	குடும்ப படம்	குடும்ப உறுப்பினரின் எண்ணிக்கை
குடும்பம் 1		
குடும்பம் 2		
குடும்பம் 3		

©KTBS NOT TO BE REPUBLISHED

குடும்பம் 4		

➤ எந்த குடும்பத்தில் மிகக் குறைவான உறுப்பினர் உள்ளனர்? ☐

➤ மிக அதிக உறுப்பினர் உள்ள குடும்பம் எது? ☐

➤ உன் குடும்பத்தில் எத்தனை பேர் உள்ளனர்? ☐

இங்குள்ள படங்களில் அதிக உறுப்பினர்கள் உள்ள குடும்பப் படத்தின் முன் (✓) குறியிடு.





கோடிட்ட இடங்களை நிரப்புக.

குறைந்த உறுப்பினர்கள் உள்ள குடும்பத்தை சிறிய குடும்பம் என்பர்.
அதிக உறுப்பினர்கள் உள்ள குடும்பத்தை பெரிய குடும்பம் என்பர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

விமலாவின் குடும்பத்தில் ஆறுபேர் இருக்கின்றனர். பாட்டி, தாத்தா, அம்மா, அப்பா, விமலாவின் அண்ணன் அருண் மற்றும் விமலா.

NOT TO BE REPUBLISHED

விமலாவின் குடும்ப படத்தை கவனி. இங்கு என்ன நடக்கிறது? சொல். உன் வீட்டில் உன் வேலைகளில் யார் உதவிசெய்கிறார்கள்? கூறு.

குடும்ப உறுப்பினர் உன் ஆட்டம், பாட்டங்கள் மற்றும் இதர செயல்களில் உதவுகின்றனர். குடும்பத்தினரின் அவசியம் நம் எல்லோருக்கும் உண்டு.

இப்படங்களைக் கவனி.

- விமலா தன்னுடைய வீட்டின் பக்கத்திலுள்ள இராதாவின் வீட்டிற்கு சென்று கொண்டிருக்கிறாள்.



NOT TO BE REPUBLISHED @KTBS

விடை தருக

- இப்படத்தில் விமலா என்ன செய்து கொண்டிருக்கிறாள்?
- அவளுக்கு உதவி செய்வது யார்?
- உன்வேலைகளில் உதவி செய்கிறார்களா?
- அக்கம் பக்கத்தாருக்கு உதவி செய்யும் பழக்கங்களை வளர்த்துக் கொள்

அக்கம் பக்கத்தாருக்கு உதவி செய்யும் பழக்கங்களை வளர்த்துக்கொள்



@KTBS
NOT TO BE REPUBLISHED

மேலுள்ள படத்தைக் கவனி. வட்டத்தில் வண்ணமிடு.

- பருமனான நபருக்கு-சிவப்பு வண்ணம் தீட்டு.
- சுருள் முடியுள்ள நபருக்குக்-கறுப்பு வண்ணத்தை நிரப்பு.
- மெல்லிய நபருக்கு-நீலநிறத்தை வட்டத்தில் நிரப்பு.
- குட்டையான நபரை-பச்சை வண்ணத்தில் தீட்டு.
- நீண்ட கூந்தல் உள்ளவருக்கு-கேசரி வண்ணம் தீட்டு.

உன் நண்பர்களுடைய குண நலன்களைப் பட்டியல் செய்.

நண்பரின் பெயர்	வண்ணம்	உயரம் நீளம் குட்டை	பருமனான / மெலிந்த	முடி (நேர்/ சுருள்)	முடி நீண்ட/ குட்டை

©KTBS NOT TO BE REPUBLISHED

இப்பட்டியலில் உனக்கும் நண்பர்களுக்கும் உள்ள குணங்களில் உள்ளவேறுபாடுகளை அறிக. நண்பர்களுடன் விவாதிக்க.

படத்தில் ஜானகி, பரீதா, மோகன், ஜான், ரமேஷ் அனைவரும் ஒன்றாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் பார்பதற்கு வெவ்வேறாக தோற்றமளிக்கின்றனர். அவர் அனைவரும் ஒன்றாக பள்ளிக்கு வருகின்றனர். எல்லோரும் பள்ளி சீருடையை அணிந்துள்ளனர். அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு ஒன்றாக படிக்கின்றனர். அனைவரும் அன்புடனும், பாசத்துடனும் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றனர்.

நீயும் உன் நண்பனும் வெவ்வேறாக காண்கிறீர்கள் அல்லவா? நீ உன் நண்பர்களுடன் சேர்ந்து படிப்பாயா? ஆடுவாயா? உன் நண்பர்களுக்கு உதவியாகவும், பாசத்துடன் நடப்பாயா?

பாடி-பகிழ்

நான் உயரம் நீ குட்டை
வெவ்வேறு உடல் வண்ணம்
பள்ளியில் பயிலும் - நாம்
இருவரும் நண்பர்கள்

கருங்கருப்பு கண்கள்
நீண்ட, குட்டைக் கூந்தல்
மூக்கு காதுகளெல்லாம்
சிறிது பார்க்க வேறுபாடு

நான் வேறு, நீ வேறு
பார்க்கும் கண்களுக்கு
ஆனாலென்ன கூடி நாம்
ஆடுவோம் இன்பமாக

@KTBS
NOT TO BE REPUBLISHED

H6B9J8

பாடம் - 13

பண்டிகை வந்தது பண்டிகை

இவ்வலகைக் கற்றபின் நீ,

- குடும்பத்தில் உறவினர் குடும்ப நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதைப் பற்றி விவரப்பீர்கள்.

இப் படங்களை கவனி. நிகழ்ச்சிகளின் பெயர்களை கொடுத்துள்ள கட்டத்தில் எழுது.



© TNTBS NOT TO BE REPUBLISHED

ரீடாவின் பிறந்த நாள் படங்களைப் பார்த்து கதை சொல்

@KTBS NOT TO BE REPUBLISHED

விடை கூறு:

- உன் வீட்டில் என்னென்ன விழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன?
- உன் வீட்டில் கொண்டாடும் விழாக்கள் யாவை?
- உன் வீட்டில் நடந்த ஏதாவதொரு நிகழ்ச்சி அல்லது பண்டிகை பற்றி இரண்டு வாக்கியங்களில் கூறு.
- நீ உன் நண்பர்களின் வீட்டில் அல்லது உறவினர்களின் வீட்டில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு சென்று இருக்கிறாயா?
- அந்த நிகழ்ச்சிகளின் பெயர்களைக் கூறு.

கீழுள்ள படங்களைப் பார். இந்த பண்டிகைகள் எது என்பது உனக்குத் தெரியுமா? கொடுத்துள்ள இடங்களில் அவைகளின் பெயர்களை எழுது.



© KTBS NOT TO BE REPUBLISHED

தீபங்களின் பண்டிகையே தீபாவளி. இந்துக்கள் இப்பண்டிகையை ஆடம்பரமாகக் கொண்டாடுவர்.

குடும்பத்தினர் அனைவரும் புத்தாடை அணிவர். வகை வகையான இனிப்புத் தின் பண்டங்களை செய்து உண்பர். வீடுகளில் விளக்கேற்றி **பசுமை** பட்டாசு கொளுத்துவர்.

ரம்சான் மாதத்தின் கடைசியில் கொண்டாடப்படும் ஈத்-உல்-பீதர். இது இஸ்லாமியர்களின் முக்கிய பண்டிகை. இப்பண்டிகையை ஒரு மாத காலம் விரதமிருந்து பிறகு கொண்டாடுவர். அனைவரும் புத்தாடை அணிந்து இனிப்பு பகிர்ந்து வாழ்த்து தெரிவித்துக் கொள்வர்.

NOT TO BE REPUBLISHED
©KTBS

இயேசுகிறிஸ்துவின் பிறந்த நாளே கிறிஸ்துமஸ். கிறிஸ்த்துவர்கள் இப்பண்டிகையை டிசம்பர் 25 அன்று வெகு ஆடம்பரமாக, கோலாகல மாக கொண்டாடுகின்றனர். புத்தாடை அணிந்து கேக் வழங்கி எல்லோருக்கும் வாழ்த்து கூறுவர்.

கீழுள்ள படங்களைப் பார். இந்த விழாக்களில் நீ கலந்து கொண்டிருந்தால் (✓) குறியிடு.

கீழுள்ள படங்களைக் கவனி. இப்பண்டிகைகளின் பெயர்களை எழுது.





@KTBS NOT TO BE REPUBLISHED



© KTBS NOT TO BE REPUBLISHED

உன் பள்ளியில் கொண்டாடும் விழா/நிகழ்ச்சிகளின் பெயர்களைக் கூறு.

நீயும் உன் நண்பர்களும் பள்ளி நிகழ்ச்சிகளில் எவ்வாறு பங்கேற்பீர் கூறு.

உனக்கு விருப்பமான ஒரு பள்ளி விழா குறித்து விவரம் அறிக.

படங்களுக்கு வண்ணம் தீட்டுக.







NOT TO BE REPUBLISHED

பல்வேறு வகையான கோலங்களை போடக் கற்றுக் கொள். பெரியவர்கள் அதற்கு வண்ணம் நிரப்புவதை கவனி.

உன் வீட்டில் கொண்டாடும் பண்டிகை அல்லது நிகழ்ச்சிகளுக்கு உன் வீட்டினர், வீட்டை எவ்வாறு அலங்கரிக்கின்றனர் என்பதைக் கவனி. நீயும் கற்றுக் கொள்.

பாடம் - 14

பெரியவர்களின் உபசரிப்பு

P4M6W4

இவ்வலகைக் கற்றபின் நீங்கள்,

- நோயாளிகளுக்கும் வயதானவர்களுக்கும் உதவும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வீர்கள்.

விடைதருக:

- பாட்டி ஏன் படுத்துக் கொண்டிருந்தார்?
- ராஜா பாட்டிக்கு எப்படி உதவி செய்தான்?
- உன் அப்பா, அம்மா, தாத்தா பாட்டிக்கு நீ எவ்வாறு உதவியாயிருப்பாய்?

கீழுள்ள படங்களைக் கவனி. குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் சொல்.





கீழுள்ள படங்களைக் கவனி. உனக்கு சரி எனப் படுவதற்கு(✓) குறியிடு. தவறு எனப்படுவதற்கு(X) குறியிடு.













@KTBS NOT TO BE REPUBLISHED

கீழுள்ள படங்களைக்கவனி இச்சந்தர்ப்பங்களில் நீ என்ன செய்வாய்?



@KTPS NOT TO BE REPUBLISHED

பாடி மகிழ்

பெரியோர் வேலையில் உதவி செய்
நோயாளிகளுக்கு தேவை உபசரிப்பு
உதவிட நீ கற்றுக்கொள்
வளர்த்துக்கொள் அன்பையும் ஆதரவையும்.

நாம் பெரியவர்களை மதிக்க வேண்டும். வயதானவர்களையும் நோயாளிகளையும் அன்புடன் உபசரித்து பார்த்துக்கொள்ள வேண்டும்.

N3U1R8

பாடம் - 15

உதவி/ஒத்துழைப்பு

இவ்வலகைக் கற்றபின் நீ,

- வீட்டில் யார் யார் எந்தெந்த வேலைகளை செய்கின்றனர் என்பதைக் குறிப்பிடுவீர்கள்.

இது ரமாவின் வீடு. ரமாவின் விட்டில் உள்ளவர் என்ன வேலை செய்கின்றார்கள் கவனி.

யார் எந்த வேலையை செய்கின்றனர்? கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுது.

- ➢ தோட்டத்தில் தண்ணீர் ஊற்றுவது ______
- ➢ பூ பறிப்பது ______
- ➢ சடை பின்னுவது ______
- ➢ புத்தகம் அடுக்குவது ______

காலையிலிருந்து இரவு வரை உன்வீட்டில் நடைபெறும் வேலைகளை பட்டியல் செய். ஒவ்வொரு வேலையையும் குடும்பத்தில் யார் செய்தனர் என்பதை எழுது.

இது மமதாவின் வீடு. அவளின் அப்பா, அம்மா மற்றும் அண்ணன் ஆகியோர் வசிக்கின்றனர். மமதாவின் வீட்டிலுள்ள வேலைகளை இப்படத்தில் பார்.

NOT TO BE REPUBLISHED

விடை தருக

- மமதாவின் வீட்டில் என்னென்ன வேலைகள் நடைபெறுகிறது? சொல்.
- எந்த வேலையை யார் செய்கின்றனர்?
- ஒருவரே எல்லா வேலைகளை செய்தால் என்னவாகும் சிந்தித்து பார்.
- உங்கள் வீட்டில் எல்லோரும் சேர்ந்து எந்த வேலையைச் செய்கிறீர்கள்?
- இதனால் உண்டாகும் நன்மை என்ன? சிந்தித்து செயல்படு.

உன் வீட்டில் நீ செய்யும் வேலைகளுக்கு (✓) குறியிடு.













@KTBS
NOT TO BE REPUBLISHED

உன் வீட்டில் நீ எந்தெந்த வேலைகளைச் செய்ய உதவுவாய்?

கீழ்க்காணும் படங்களைப் பொருத்துக.











@KTBS
NOT TO BE REPUBLISHED

கீழ்காணும் வேலைகளை நடித்துக்காட்டு.

1) கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பது.

2) செடிகளுக்கு நீர் ஊற்றுவது.

3) விறகு உடைப்பது.

4) பாத்திரம் கழுவுவது.

5) துணி துவைப்பது

6) குப்பைக் கூட்டுவது.

7) காய்கறி நறுக்குவது.

8) சடை பின்னுவது.

பாடி மகிழ்

இல்லம் ஒரு கோயில்
பார்ப்பதற்கு எவ்வளவு அழகு
இங்கு கூடி வேலை செய்து
பூவை வளர்ப்பது அழகு
நம் காலம் பொன்னானது.
போற்றுவோம் அன்பு கிடைத்திட

©KTBS
NOT TO BE REPUBLISHED

பாடம் - 16

ஆடி மகிழ்

இவ்வலகைக் கற்றபின் நீங்கள்

- பள்ளியின் உள்ளே மற்றும் வெளியே ஆடும் ஆட்டங்களை பட்டியல் செய்வீர்கள்.

கீழுள்ள படங்களை கவனி. நீ வீட்டில் ஆடும் ஆட்டங்களுக்கு (✓) குறியிடு.

@KTBS NOT TO BE REPUBLISHED

நீ பள்ளியில் நண்பர்களுடன் சேர்ந்து, குழுவாக எந்தெந்த ஆட்டங்கள் ஆடுவாய் கூறு. ஐந்து ஆட்டங்களின் பெயர்களை இங்கு எழுது.

____

____

____

____

____

©KTBS NOT TO BE REPUBLISHED

கீழுள்ள படங்களைக் கவனி. இவ்வாட்டங்களை எங்கு விளையாடுவர். கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் (✓) குறியிடு.



உள்ளே ☐ வெளியே ☐

உள்ளே ☐ வெளியே ☐

உள்ளே ☐ வெளியே ☐

உள்ளே ☐ வெளியே ☐

கீழே சில உள்ளே மற்றும் வெளியே ஆடும் ஆட்டங்களை அவ்வவ்விடத்தில் (✓) குறியிடு.

ஆட்டங்கள்	உள்ளே	வெளியே
பகடை ஆட்டம்		
கேரம்		
நொண்டியாட்டம்		

©KTBS NOT TO BE REPUBLISHED

தாயக்கட்டை		
லகோரி		
கிரிக்கெட்		
பாம்பு ஏணி		
ஓடிபிடித்து ஆடுவது		
கயிறாட்டம்		
பம்பரம்		
வாலிபால்		
கபடி		

@KTBS NOT TO BE REPUBLISHED

பள்ளியில் அல்லது வீட்டின் உள்ளே ஆடும் ஆட்டங்களை உள் அரங்க ஆட்டம் என்பார்கள்.	பள்ளி அல்லது வீட்டின் வெளிப்புறத்தில் ஆடும் ஆட்டங்களை திறந்த வெளி ஆட்டங்கள் என்பர்.

கீழுள்ள ஆட்டங்களைக் கவனி. படங்களுக்குக் கீழே கொடுத்துள்ள காலி இடங்களில் உள்ளரங்க ஆட்டங்களுக்கு □ மற்றும் வெளியரங்க ஆட்டத்திற்கு △ என்று அடையாளமிடு.









©KTBS NOT TO BE REPUBLISHED

இவ்வாட்டங்களை ஆட பயன்படுத்தும் உபகரணங்கள் கொடுக்கப்பட்டுள்ள இடங்களில் எழுது..

கிரிக்கெட்	______	______	______
கால்பந்து	______	______	______
பகடை	______	______	______
லகோரி	______	______	______
கோலி ஆட்டம்	______	______	______
கில்லி	______	______	______
கபடி	______	______	______
கைப்பந்து	______	______	______
கண்ணா மூச்சி	______	______	______
பாம்பு ஏணி ஆட்டம்	______	______	______

பள்ளியின் உள்ளே மற்றும் வெளியே ஆடும் ஆட்டங்களின் படங்களை சேகரித்து காலி இடத்தில் ஒட்டவும்.

பள்ளியின் உள்ளே	**பள்ளியின் வெளியே**

@KTBS NOT TO BE REPUBLISHED

புள்ளிகளை இணைத்து, படங்களுக்கு வண்ணம் தீட்டு.





@KTBS
NOT TO BE REPUBLISHED

பாடி மகிழ்

ஆட்டத்தின் வகைகள் நூறாறு
உள்ளே வெளியே பலவாறு

லகோரி, கிரிக்கெட் திறந்தவெளி
ஆடத் தேவை வெட்டவெளி

கேரம் ஆட உள்ளறை
தாயத்திற்கும் போதும் உள்ளறை

சர சரவென சுற்றும் பம்பரம்
சட் பட்டென எகுரும் கில்லி தாண்டு

சுழன்று பறக்கும் பந்தின் நோட்டம்
வகை வகை நிறத்து கோலி ஆட்டம்.

நண்பர்கள் கூடி ஆட்டங்களை
ஆடி பாடி மகிழ்ந்திடுவேன்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

பாடம் - 17

நமக்கு இவை தேவை

இவ்வலகை கற்றபின் நீங்கள்

- நமது தேவைகளைப் பற்றி அறிவீர்கள்.

இப்படங்களினால் நீ அறிவதென்ன? தெரிந்து கொள்வதென்ன?

நான் கற்பதற்கு
பள்ளிக்குப்
போவேன்





வீட்டிற்கு காய்கறி
வாங்க. கடை
வீதிக்கு செல்வேன்



வீட்டிற்கு அரிசி,
கோதுமை தேவை
நியாய விலைக்
கடைக்குப் போவேன்

அதிக காய்ச்சல்
மருத்துவ மனைக்குச்
சென்று மருந்து
வாங்கி வருவேன்



©KTBS NOT TO BE REPUBLISHED



பள்ளிக்கூடம், கடைத்தெரு, மருத்துவமனை, நியாய விலைக் கடை, பேருந்து நிலையம், தபால் நிலையம் இவைகள் நம் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

இப்படங்களைப் பார். இவை உன் ஊரில் இருந்தால் சிறியகட்டத்தில் (✓) குறியிடு.







இவை நமக்குத் தேவை, ஏன்? கூறு.

KTBS NOT TO BE REPUBLISHED

கோடிட்டு பொருத்துக













@KTBS
NOT TO BE REPUBLISHED

பாடி மகிழ்

ஆட்டம் பாட்டம் கற்றிட
பள்ளியில் நீ சேர்ந்திடு
தாத்தா வீடு சேர்ந்திட
பூம் பூம் பேருந்து ஏறிடு.

காய் கறிகள் பழவகைகள்
கடைத் தெருவில் ஏராளம்
குளிர் காய்ச்சல் நோய்கள்
வந்தால் மருத்துவமைனயில் குணமாகும்.

எல்லாம் நமக்காக
இவை எல்லாம் நமக்காக
பாழாக்காமல் பார்த்துக்
கொள்வேன் என்றும் இதையெல்லாம்.

@KTBS NOT TO BE REPUBLISHED

இவை எல்லாம் நமக்குத் தேவை.

Z5N2F4

பாடம் - 18

வான் வெளியில்

இவ்வலகைக் கற்றபின் நீங்கள்

- சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் கண்ணுக்குத் தெரியும் இவைகளின் தன்மைகளை குறிப்பிடுவீர்கள்.
- கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு திசைகளை அறிவீர்கள்.

கீழுள்ள படத்தை கவனி இது எந்த வேளை? சொல்.



NOT TO BE REPUBLISHED @KTBS

பகல் பொழுது ஆகாயத்தில் என்ன தெரிகிறது? எழுது.

குழந்தாய் நானே சூரியன் நான்
பகலில் காணப்படுகிறேன்.
உமக்கெல்லாம் வெளிச்சம்
தருகிறேன்.





@KTBS NOT TO BE REPUBLISHED



நான் உதிக்கும் மற்றும் மூழ்கும் திசைகள் எதுவென்று உனக்குத் தெரியுமா?

இப்படத்தைப் பார். கீழக்கு திசையில் நான் உதிக்கிறேன். ரெஹனா எனக்கு எதிரில் நின்று நான் உதிப்பதை பார்த்துக் கொண்டிருக்கிறாள்.



NOT TO BE RE-PUBLISHED ©KTBS

ரெஹனா மேற்கு திசைக்கு முதுகை காட்டியிருக்கிறாள். நான் மறையும் திசை மேற்கு



ரெஹனா இப்பொழுது தன் இடது கையை நீட்டி மரத்தைக் காட்டுகிறாள். மரம் வடக்கு திசையில் உள்ளது.







@KTBS NOT TO BE REPUBLISHED

கீழுள்ள படத்தில் பவன் கிழக்கு திசையின் எதிரில் நின்றுள்ளான். படத்தை கவனி. கீழுள்ள வாக்கியங்களைப் பூர்த்திசெய்.



➢ தென்னை மரம் பவனின் ____________ திசையில் உள்ளது.

➢ பசுக்கள் ____________ திசையில் உள்ளன.

➢ தெற்கு திசையில் ____________ உள்ளது

ஆடி மகிழ்:

நண்பர்களுடன் மைதானத்திற்கு வா, சூரியனுக்கு எதிரில் நில். மீதமுள்ள மூன்று திசைகளைக் குறிக்கும் ஆட்டம் ஆடு. திசைகளை சரியாக குறிப்பிடுபவர்கள் வெற்றி பெற்றவர்கள் ஆவர்.



©KTBS NOT TO BE REPUBLISHED

மேலுள்ள படத்தைக் கவனி. பகல் பொழுதில் சாதாரணமாகக் காணும் சில வேலைகள் இவை. ஆசிரியர் அல்லது பெரியவர்களின் உதவியுடன் இவை எந்த வேலைகள் என்பதை கொடுத்துள்ள கட்டங்களில் எழுது.

பகல் பொழுதில் நீ செய்யும் வேலைகளைப் பற்றி உன் நண்பர்களுடன் கலந்துரையாடு.

சூரியனை வெற்றுக் கண்ணால் நேரடியாக பார்க்காதே. சூரியனை பார்க்க விசேடமாக தயாரித்த கண்ணாடிகள் உள்ளன. ஆசிரியர் அல்லது பெரியவர்களின் உதவியுடன் பார்.

நான் மறையும் வேளையாயிற்று. இப்பொழுது இருட்டாகும். குழந்தைகளே இப்பொழுது ஆகாயத்தைப் பாருங்கள்.

©KTBS NOT TO BE REPUBLISHED

உனக்கு என்ன தெரிகிறது இங்கு எழுது ________________, ________________

நான் சந்திரன். இரவு வானில் நான் தென்படுவேன் தினமும் இரவில் என் வடிவத்தைப் பார். என் வடிவம் மாறிக் கொண்டிருக்கிறதல்லவா? நான் முழுமையாகக் காணும் தினம் பௌர்ணமி நாள். நான் காணாமல் இருக்கும் நாளே அமாவாசை.

இவ்வாறு செய்:

கீழே 15 சதுரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பௌர்ணமி நாளில் தொடங்கி தினமும் காணும் வடிவத்தை இங்கு வரை.

பௌர்ணமி, அமாவாசை எத்தனை தினங்களுக்கு ஒருமுறை வருகிறது.

குழந்தைகளே இரவு நேரங்களில் நீங்கள் எங்களை பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?

@KTBS NOT TO BE REPUBLISHED

நாங்கள் தான் நட்சத்திரங்கள். இரவில் ஆகாயத்தில் மின்னிக் கொண்டிருப்போம். எங்களை உங்களால் எண்ண முடியுமா?

புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டுக.



பாடி மகிழ்

சூரியன் வந்தான் வானத்திலே
வெளிச்சத்தை தந்தான் கதிரினிலே
பறவைகள் பறக்கும் வேளையிலே
வேலைகள் நடக்கும் விறுவிறுப்பாய்

நிலா நிலா வா வா
உனது வெளிச்சம் தா தா
விண்மீன் கூட சேர்ந்து
விடியும்வரை ஆடு.

மின்னும் மின்னும் விண்மீனே
வருவாய் வருவாய் என்னுடனே
பள பளக்கும் உன் வெளிசத்திலே
ஆடுவோம் நாங்கள் உற்சாகத்திலே.

NOT TO BE REPUBLISHED @KTBS

Y1B6A3

பாடம் - 19

எனது ஊர் அழகான ஊர்

இவ்வலகைக் கற்றபின் நீங்கள்

- இருப்பிட நிலவியல் தன்மையை குறிப்பிடுவீர்கள்.
- உங்களுடைய ஹொபளி மற்றும் தாலுக்காவை குறிப்பிடுவீர்கள்.

இப்படங்களை கவனி. கடந்த வகுப்பில் இவைகளைப் பற்றி தெரிந்து கொண்டிருப்பீர். நினைவுகூர். அவைகளின் பெயர்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எழுது.







@KTBS NOT TO BE REPUBLISHED





நான்யார்?



நான் அகலமாகவும் ஆழமாகவும் இருக்கிறேன். என்னுடைய நீரை துணி துவைக்க, வாகனங்கள் கழுவ, கால் நடைகளைக் கழுவ, விவசாயத்திற்கு மற்றும் பல செயல்களுக்கு உபயோக்கிறார்கள். **நான் யார்?**

உன்னுடைய ஊரில் ஏரி இருந்தால் பெரியவர்களுடன் சென்று பார். அங்கு நடை பெறும் செயல்களை கவனி.

உன் ஊரின் ஏரி நீர் சுத்தமாக இருகிறதா என்று கவனி இந்த நீரை சுத்தமாக வைக்க என்ன செய்வாய்? யோசி.

NOT TO BE REPUBLISHED @KTBS

என் வண்ணம் பச்சை, பல வகையான செடிகள், மரங்கள், பிராணிகள் பறவைகள் என்னுள் உள்ளன. குளிர்ச்சியான காற்றை நான் தருகிறேன்.

நான் யார்? ______

உன் ஊருக்கு அருகில் காடு இருந்தால் அங்குள்ள பிராணி, பறவைகள் பற்றி பெரியவர்களிடம் கேட்டு தெரிந்து கொள். காட்டின் மரம், செடிகளை வெட்டினால் என்னவாகும்? நண்பார்களுடன் விவாதிக்க.

NOT TO BE REPUBLISHED ©KTBS

எங்கெங்கும் தண்ணீர். ஆனால் உப்புநீர். என்னுடைய கரையில் மணற் குவியலே இருக்கிறது. கப்பல்கள் என்மேல் செல்கின்றன. மீனவர்கள் மீன் பிடிப்பார்கள். தூரத்திலிருந்து பார்த்தால் என் நிறம் நீலம்.

நான் யார்? ______



உன் ஊருக்கு அருகில் கடற்கரை இருந்தால் பெரியவர்களுடன் சென்று அங்கு நடைபெறும் செயல்களைக் கவனி.

நான் உயரமாக இருப்பேன். சிலசமயம் கல் பாறைகள், கருங்கற்கள் என்னிடம் இருக்கும். என்மேல் மரங்கள், செடி கொடிகள் வளரும்.

நான் யார்? ______



உன் ஊருக்கு அருகில் மலைக் குன்றுகள் இருந்தால் பெரியவர் மற்றும் நண்பர்களுடன் உல்லாசப் பயணம் செல். அவைகளின் வடிவத்தைக் கவனி. அங்கு காணும் பொருட்களை பட்டியல் செய்.

ஜல ஜல என்று பாய்வேன் நான். குடிப்பதற்கு தேவை என் நீர். வேலைகளுக்கும் தேவை என்னுடைய நீர். பிராணிகளும், பறவைகளும் என் மடியில் தவழும்.

நான் யார்? ______



புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டு



@KTBS NOT TO BE REPUBLISHED

என்னைத் தேடு

இந்த எழுத்துக் கோர்வையில் உன் சுற்று முற்றும் நீ பார்த்துள்ள மற்றும் அறிந்துள்ள பொருட்கள் உள்ளன. அவைகளைக் குறி. அவைகளுக்கு வட்டமிடு. ஒரு மாதிரி இங்கு கொடுக்கப் பட்டுள்ளது.

ஒ	ட	ஆ	மை	ப	சா	ண்	ங்
ச	கூ	வீ	தி	ற்	லை	பா	ரா
ர	த்	ச்	ம	க	ஒள	தெ	மி
வ	ய	ல்	ர	ல்	கு	ரே	கை
ள்	ழ	தௌ	ம்	ன்	ப	ள்	ளி
கே	ஏ	ரி	போ	கி	ஊ	ஈ	னு
போ	று	ங்	று	வா	மூ	வீ	டு
ரை	ழை	கே	கி	ளி	ட்	தா	றா

உதாரணம் : ஆமை

1. ______________

2. ______________

3. ______________

4. ______________

5. ______________

©KTBS NOT TO BE REPUBLISHED

பாடி மகிழ்!

வாரும் அண்ணா, வாரும் அக்கா
ஊரை பார்த்து வருவோம்
சுற்று முற்றும் இருப்பவைகளை
பார்த்து கேட்டு அறிவோம்.

மலைச் சிகரம் காடு மேடு
நம்மைச் சுற்றி இருப்பவை
மரம் செடி பிராணி பறவை
அதிலிருக்கும் அறிவோம்.

ஏரி, குளம், நதிகள்
நம்மைச் சுற்றி பாய்வது
சமுத்திரமே பெரியண்ணன்
தெரிந்து கொள்ள வேண்டுமே

NOT TO BE REPUBLISHED @KTBS

உன் ஊரைச் சுற்றி குன்று, மலை, ஏரி நதிகள் இருக்கின்றனவா? இருந்தால் அவை எங்குள்ளன என்பதைப் பற்றி உன் நண்பர்களுடன் கலந்துரையாடு. இவைகளைப் பற்றி தெரிந்து கொள்.

கீழ்க்காணும் படத்தைக் கவனி. சிஞ்சனா தன் ஊரை அறிமுகப்படுத்துகிறாள்.

தாலுக்காவின் படம்



இது எனது தாலுக்கா/வட்டம்

இது எனது ஹோபளி/ஒன்றியம்

இது எனது ஊர்

@KTBS NOT TO BE REPUBLISHED

விடையளி:

- உன் ஊரின் பெயரை இங்கு எழுது
- உன்னுடைய ஊர் எந்த ஒன்றியத்தைச் சேர்ந்துள்ளது என்பதை ஆசிரியரின் உதவியுடன் அறிந்து இக்கட்டத்தில் எழுது
- உன்னுடைய ஊர் எந்த தாலுக்காவைச்சேர்ந்துள்ளது என்பதைப் பெரியவர்கள் மூலம் அறிந்து எழுது.

பாடி மகிழ்

ஊரு ஊரு எந்தன் ஊரு

எந்த ஊரு உந்தன் ஊரு

எந்தன் ஊர் ____________

ஹோபளி ஹோபளி எந்தன் ஹோபளி

எந்த ஹோபளி உந்தன் ஹோபளி

எந்தன் ஹோபளி ____________

இதே போல தாலூக்கா மற்றும் மாவட்டம் பாட்டை எழுதி நண்பர்களுடன் ராகத்துடன் பாடு.

@KTBS NOT TO BE REPUBLISHED